**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 31-01-2025**

**தி -நீல்கிரிஸ்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2025-01-31 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2025-02-01 | 2025-02-02 | 2025-02-03 | 2025-02-04 | 2025-02-05 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 10.0 | 8.0 | 6.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 22.0 | 22.0 | 22.0 | 23.0 | 23.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 10.0 | 10.0 | 10.0 | 12.0 | 12.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 58 | 58 | 58 | 69 | 69 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 75 | 75 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 4 | 4 | 4 | 4 | 6 |
| காற்றின் திசை (கோணம்) | 110 | 110 | 110 | 90 | 110 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 4 | 3 | 3 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் நாட்களில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் இருக்கும். முதல் மூன்று நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யும் எனவும் , நான்காவது மற்றும் ஐந்தாவது நாளுக்கு மழை பெய்ய வாய்ப்பில்லை என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 22- 23°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 10-12° செ ஆகவும் இருக்ககூடும். காலை நேர காற்றின் ஈரப்பதம் 58-69 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 70-75 சதவிகிதமாகவும் இருக்ககூடும். சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 04-06 கி.மீஅளவுக்கு வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

குருமிளகு வாடல் நோயைக் கட்டுப்படுத்த, ஒரு செடிக்கு டிரைக்கோடெர்மாஅஸ்பெரெல்லாம் / அல்லது பேசிலஸ்சப்டிலிஸ்@ 25 கிராம் மற்றும் வேப்பம் பிண்ணாக்கு 500 கிராம் இடலாம். மழை இல்லாத நேரங்களில் இட வேண்டும்.

## குறுஞ்செய்தி :

i. போதிய வடிகால் வசதி வழங்குதல். ii. உரம் மற்றும் பூச்சிக் கொல்லி பயன்பாடு போன்ற உழவியல்/ பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை நிற்கும் வரை ஒத்திவைக்கவும்.

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| முள்ளங்கி | கேரட்டில் நூற்புழு மேலாண்மைக்கு, நடவு செய்யும் போது எக்டருக்கு 1 டன் வேப்பம் புண்ணாக்கு மண்ணில் இடவும். கடுகு செடிகளை உயிரி புகையாக்குதல் மற்றும் வேப்பம்புண்ணாக்கு ஒரு ஹெக்டருக்கு 250 கிலோ இடுதல், பர்ப்யூரோசிலியம்லிலாசினம் @ 5 கிலோ/எக்டர் என்ற அளவில், மழை இல்லாத நேரங்களில் இட வேண்டும். |
| பூண்டு | பூண்டு - ஊட்டச்சத்து மற்றும் நோய் மேலாண்மை • பூண்டு விளைச்சலை அதிகரிக்க நடவு செய்த 30, 45 மற்றும் 60 நாட்களில் நீரில் கரையக் கூடிய நுண்ணூட்டச் சத்து கலவையை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.50 கிராம் என்ற அளவில் இடலாம். • பூண்டு பயிரில் இலைப்புள்ளி / ஊதாநிற கருகல் நோய் ஏற்படுவதை நிர்வகிக்க, மான்கோசெப் @ 2 கிராம்/லி அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2.5 கிராம்/லி என்றஅளவில், மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும். |
| உருளைக்கிழங்கு | உருளைக்கிழங்கு பயிரில் இலை கருகல் நோயைக் கட்டுப்படுத்த, • நடவு செய்த 45, 60 மற்றும் 75 நாட்களில் மான்கோசெப் @ 2 கிராம்/லி அல்லது குளோரோதலோனில் @ 2 கிராம்/லி என்ற அளவில் இலைவழி, மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும். |
| தேயிலை | தேயிலையில் கொப்புள கருகல் நோய் மேலாண்மை முறைகள் பாதிக்கப்பட்ட இலைகள் மற்றும் தளிர்களை கவாத்து மூலம் நீக்கி அழிக்கவும் ஹெக்ஸகோனசோல்@ 200 மிலி + காப்பர்ஆக்ஸிகுளோரைடு@ 210 கிராம்/எக்டருக்கு 5 நாட்கள் இடைவெளியில் (அல்லது) காப்பர்ஆக்ஸிகுளோரைடு@ 210 கிராம் + புரோபிகோனசோல்@ 200 மிலி/ எக்டருக்கு 10 நாட்கள் இடைவெளியில், தெளிக்கவும் எளிதில் நோய் பாதிக்கக்கூடிய ரகங்களை தவிர்த்து, நோய் எதிர்ப்பு ரகங்களையிரிடவும் மத்திய பூச்சிக்கொல்லி வாரியப் பரிந்துரைகள் பின் வரும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கவும. ஹெக்ஸகோனசோல் 5% EC @ 200ml/ha (அல்லது) ப்ரோபிகோனசோல் 25% EC @ 125-250ml/ha (அல்லது) கார்பென்டாசிம் 12%+ மான்கோசெப் 63% WP @ 1250g/ha (அல்லது) ஹெக்ஸகோனசோல் 4% + ஜினெப் 68% WP @ 625g/ha |
| இஞ்சி | இஞ்சி மென்அழுகல் மேலாண்மை • போதுமான வடிகால் வசதிகளை ஏற்படுத்தலாம் • நோயற்ற விதை கிழங்குகளைத் தேர்ந்தெடுத்து, விதைக் கிழங்குகளுக்கு மான்கோசெப் அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 3 கிராம்/லி அல்லது 200 பிபிஎம் ஸ்ட்ரெப்டோசைக்ளின் மூலம் 30 நிமிடங்களுக்கு விதை நேர்த்தி செய்யலாம். • நோயுற்ற வயலில், பாத்திகளை காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2.5 கிராம்/லி அல்லது போர்டாக்ஸ் கலவை@ 1%என்ற அளவில், மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும். |